# திருக்கனூரில் கலை விழா



அரசு கலை பண்பாட்டுத்துறை, தஞ்சை தென்னகப் பண்பாட்டு மைய
சார்பில் திருக்கனூரில் நடக்கும் கலை விழாவில், ஜம்மு காஷ்மீர் – டோக்ரி, ஜாகர்ன
நடனம் நடந்தது.

**திருக்கனூர், ஆக. 17–**

அரசு கலை பண்பாட்டுத்துறை, தஞ்சை தென்னகப் பண்பாட்டு மையம் சார்பில் திருக்கனூரில் நடக்கும் கலை விழா இன்றுடன் நிறைவு பெறுகிறது.

திருக்கனூர் முத்துமாரியம்மன் கோவில் திடலில் அரசு கலை பண்பாட்டுத் துறை, தஞ்சை தென்னகப் பண்பாட்டு மையம் சார்பில் 3 நாள் 'புதுச்சேரி கலை விழா' நேற்று முன்தினம் (15ம் தேதி) துவங்கியது.

அன்று மாலை நாத சங்கமம் குழுவினரின் மங்கல இசை, கர்நாடகா – பூஜா குனிதா, ஜம்மு காஷ்மீர்–டோக்ரி, ஜாகர்னா, கைக்கிலட்பட்டு ரமேஷ் கலைக்குழுவினரின் காளியாட்டம், பம்பை உடுக்கை, ராஜரத்தினத்தின் மெல்லிசை நடந்தன.

நேற்று பரத சமுத்ராலயா சுதாலட்சுமியின் பரதநாட்டியம், மேற்கு வங்காளம் – புருலியா சௌ, உத்தரகாண்ட்– சப்போலி, சாலியா, டோக்ரி–ஜாகர்னா, கலைச்செல்வன் கலைக்குழுவின் ஒயிலாட்டம், கோலாட்டம், சாட்டை குச்சியாட்டம், தேவநாதசாமி தெருக்கூத்து சபாவின் தெருக்கூத்து நடந்தது.

ஏராளமானோர் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டனர்.

நிறைவு நாளான இன்று
(17ம் தேதி) மாலை 6:3
மணிக்கு ஆரணி, பெரி
பாளையத்தம்மன் பெ
கலைஞர்கள் சங்கத்தி
கும்மிப்பாட்டு, அ
ஸாம்–பீஹூ, போர்தா
குஜராத்–சித்தி தமா
புதுவை கோகுலம் கலை
குழுவின் சிவன், பார்வ
நடனம், ராஜ்முகில் இ
குழுவினரின் மெல்லிசை
நடக்கிறது.

ஏற்பாடுகளை கலை
பண்பாட்டுத் துறை இள
நிலை நூலக உதவியா
ளர்கள் முருகையன், மு
கானந்தம், உதவியாள
அண்ணாமலை ஆகியோ
செய்திருந்தனர்.